
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**931**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே


**நீரை.மகேந்திரன்**

**123**

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த மிசா பொன்.இராமகிருஷ்ணன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# ‘மிசா’ பொன்.இராமகிருஷ்ணன்
# தியாகதுருகத்தின் கழகச் செம்மல்!

ஓவியம் : ரவி பேலட்



1949-ஆம் ஆண்டு கழகம் தொடங்கப்பட்ட போது, தலைமைக் கழகத்தின் வழிகாட்டலில், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் கிளைக் கழகங்கள் தொடங்கும் பணிகள் வேகமாக நடைபெற்றன. ஆனால், ஊர்ப்புறங்களில் கழகக் கிளையைக் கட்டுவதும், தி.மு.கழகக் கொடிக்கம்பத்தை நாட்டுவதும் அவ்வளவு எளிதான செயலாக இருந்ததில்லை. அரசியல் செல்வாக்கு செலுத்திய செல்வந்தர்கள், மிட்டா, மிராசுகளை எதிர்த்து, அரசியல் உரிமை முழக்கம் எழுப்பிய இளைஞர்களின் கருப்பு சிவப்புக் கழகச் செயல்பாடுகள் சாதாரணமாக நிகழவில்லை. அடிதடி, தாக்குதல்களைத் தாண்டித்தான் தங்களின் அரசியல் வரலாற்றை எழுதினர், தி.மு.கழக இளைஞர்கள். பேரறிஞர் அண்ணாவின் தம்பிகள்.

அந்த வரலாற்றில், அன்றைய தென்னாற்காடு மாவட்டம் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, விருத்தாசலம் எனப் பரந்து விரிந்த பெரும் மாவட்டமாக இருந்தது. 1949-ஆம் ஆண்டில் அங்கு முதன்முதலில் 11 கிளைக் கழகங்கள் கட்டப்பட்டன. அதில் ஒரு கிளை தியாகதுருகம். கிளையை உருவாக்கிக் கழகப் பணியைத் தொடங்கியவர் பொன்.இராமகிருஷ்ணன். கிளையின் முதல் துணைச் செயலாளர்.

1926-ஆம் ஆண்டு, நவம்பர் 8-ஆம் தேதி பிறந்தவர். பெற்றோர் பொன்னுசாமி-தனபாக்கியம். ஆரம்பக் கல்வியை அந்த ஊரிலேயே பயின்றவர், தனது இளம் வயதிலேயே திராவிடக் கல்வித் திட்டத்தின் மாணவராக மாறினார். 1949-ஆம் ஆண்டு கழகம் தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்னர், தனது மண விழாவை சுயமரியாதைத் திருமணமாக திராவிடர் கழகத் தோழர்கள் சூழ நடத்தினார்.

தியாகதுருகம் போன்ற ஊர்களில், ஓரளவு பொருளாதார செல்வாக்கு கொண்ட குடும்பத்தினர், அந்த காலகட்டத்தில் பகுத்தறிவு சுயமரியாதைத் திருமணம் என்பது அசாதாரணமான புரட்சிச் செயலாக இருந்தது. அந்த அளவுக்கு திராவிடச் சிந்தனையில் ஊறியவர் இராமகிருஷ்ணன். அதே உணர்வுடன் கழகத் தொடக்க நிகழ்விலும் சென்னைக்கு வருகை தந்து கலந்து கொண்டவர்.

### கல்லக்குடிப் போராட்டத்துக்கு...

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறைவாசம் அனுபவித்தவர் இராமகிருஷ்ணன். கல்லக்குடிப் போராட்ட நாட்களின்போது, இவரது சொந்த லாரியில் சென்னையில் இருந்து கோயம்புத்தூருக்கு சரக்கு ஏற்றிச் செல்ல வந்தவர், சரக்கு ஏற்றப்பட்ட லாரியை வழியிலேயே விட்டுவிட்டு போராட்டத்தில் கலந்துகொள்ள கல்லக்குடி சென்றுள்ளார். கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம் என பல போராட்டக் களங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

1957-ஆம் ஆண்டு கழகத்தின் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், 2006-ஆம் ஆண்டு வரை செயற்குழு உறுப்பினராகத் தொடர்ந்தார். விருத்தாசலம் பகுதிக் கழகங்களுக்குப் பொதுக்கூட்டங்களுக்குச் சென்ற பேரறிஞர் அண்ணா, பொன்.இராமகிருஷ்ணன் இல்லத்துக்குச் சென்று தங்கிச் சென்றுள்ளார். அதேபோல, இராம கிருஷ்ணன் குடும்பத்துக்குச் சொந்தமான திரையரங்கில் பேரறிஞர் அண்ணா படம் பார்த்து சென்றதை **‘அண்ணா சில நினைவுகள்’** நூலில் குறிப்பிடுகிறார் கவிஞர் கருணானந்தம்.

### மாவட்டப் பொறுப்பாளர்

1974-ஆம் ஆண்டுவாக்கில், கழகத்துக்கு நெருக்கடியான காலகட்டத்தில் தென்னாற்காடு மாவட்டக் கழகத்தினருக்கு நம்பிக்கையூட்டும் விதமாக, மாவட்டப் பொறுப்பாளராக இராமகிருஷ்ணனை நியமித்தார் கலைஞர். 1998-ஆம் ஆண்டு முதல் 2000-ஆம் ஆண்டு வரை விழுப்புரம் தெற்கு மாவட்ட அவைத் தலைவராகவும், 1996-ஆம் ஆண்டு தொடங்கி, 2021-ஆம் ஆண்டு வரை தியாகதுருகம் பேரூர் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

1976-ஆம் ஆண்டு மிசா நெருக்கடி நிலை காலத்தில் கைது செய்யப்பட்ட இராம கிருஷ்ணன் ஓராண்டு காலம் சென்னை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். சிறையில் இருந்து வெளிவந்த பின்னர், பலருக்கும் மிசா அடைமொழி சேர்ந்து கொண்டதைப் போல, இராமகிருஷ்ணன் பெயரோடும் சேர்ந்து கொண்டது. விழுப்புரம், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி கழகத்தினருக்கு மிசா இராமகிருஷ்ணன் என்கிற பெயர் எளிதாக அறிமுகமாகத் தொடங்கியது.

> **“சிறையில் இருந்து வெளிவந்த பின்னர், பலருக்கும் மிசா அடைமொழி சேர்ந்து கொண்டதைப் போல, இராமகிருஷ்ணன் பெயரோடும் சேர்ந்து கொண்டது.”**

### கழகப் பொறுப்புகளில்

1966-ஆம் ஆண்டில் முதல்முறையாக தியாகதுருகம் பேரூராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்றவர், 1971-ஆம் ஆண்டு வரை தலைவராக இருந்தார். 1984-ஆம் ஆண்டில் தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவராகவும், 1987-ஆம் ஆண்டு முதல் 1989-ஆம் ஆண்டு வரை ஒன்றியப் பெருந்தலை வராகவும் மக்கள் மத்தியில் கழகச் செல்வாக்குடன் பணியாற்றியவர்.

1996-ஆம் ஆண்டு முதல் 2001-ஆம் ஆண்டு வரையிலும், 2006 முதல் 2011 வரை துணைத் தலைவராகவும் கழகத்தின் சார்பில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர்.

1966-ஆம் ஆண்டு கள்ளக்குறிச்சியில் நடந்த மாவட்டக் கழக மாநாட்டின்போதும், 1974-ஆம் ஆண்டு விழுப்புரத்தில் நடைபெற்ற மாவட்டக் கழக மாநாட்டுக் குழுவிலும் இடம்பெற்று, மாநாட்டைச் சிறப்புடன் நடத்த துணை நின்றவர். அவரது பணிகளைப் பாராட்டும் வகையில், கணையாழி அணிவித்து மகிழ்ந்தார் கலைஞர். கழகத்திற்கான அவரது பணியைப் போற்றவும், அங்கீகரிக்கவும், அவரது உழைப்பினை முன்னெடுத்துச் செல்லவும் 2014-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில், இராமகிருஷ்ணன் அவர்களின் மகன் மணிமாறனுக்கு கள்ளக்குறிச்சி தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்தார் கலைஞர்.

### பேரறிஞர் அண்ணா விருது

கழகத்தின் மூத்த முன்னோடிக்கு அதை விடவும் பெருமை சேர்க்கும் வகையில், 2018-ஆம் ஆண்டு, முப்பெரும் விழாவில் பெருமை செய்தார், இன்றைய கழகத் தலைவர் அவர்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவுகளுடன் விழுப்புரம் அண்ணா திடலில் நடைபெற்ற முப்பெரும் விழாவில், பேரறிஞர் அண்ணா பெயரிலான கழக விருதினை அளித்து பெருமை செய்தார் இன்றைய கழகத் தலைவர்.

தனது இறுதிக்காலம் வரையிலும் கழக உணர்வுடன் இயங்கி வந்த முன்னோடி, 2021-ஆம் ஆண்டு, மே 29-ஆம் தேதி இயற்கை எய்தினார். மாவட்டக் கழக முன்னோடிகள் திரண்டு வந்து மரியாதை செய்து, அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு வழியனுப்பினர். கழகத் தலைவர் வெளியிட்ட இரங்கல் கடிதத்தில் பொன். இராமகிருஷ்ணனின் பணிகளை நினைவுகூர்ந்து, கழகத் தோழர்களுக்கு ஆறுதல் அளித்தார். அவரது களப்பணி என்றென்றும் நினைவுகூரப்படும்.

...துடிக்கும்

## இருப்பவர் இல்லை, இறந்தவர் இருக்கிறார்!



மகாராஷ்டிரா சட்ட மன்றத் தேர்தல், நாடாளு மன்றத் தேர்தல், தற்போது பீகாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்புத் தீவிர திருத்தம் வரை தேர்தல் ஆணையம் எப்படியெல்லாம் பா.ஜ.க.வுக்கு சாதகமாக வாக்காளர்களைச் சேர்த்தது, திருத்தியது, நீக்கியது என எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி புள்ளிவிவரங்களோடு அம்பலப்படுத்தி வருகிறார். ஆனால், ‘வாக்குத் திருட்டு’ என்ற மோசமான சொற்களை ராகுல்காந்தி பயன்படுத்துவதாகவும், அதற்குப் பதிலாக ஆதாரங்களைத் தர வேண்டுமென்றும் தேர்தல் ஆணையம் கூறுகிறது. குற்றச்சாட்டுகளுக்காக ராகுல் காந்தி கொடுத்துக்கொண்டு இருப்பதே தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ தரவுகள்தான் என்பதை, தேர்தல் ஆணையம் முதலில் உணர வேண்டும்.

குறிப்பாக, பீகாரில் சிறப்புத் தீவிர திருத்தத்தின்படி 65 இலட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். சிறுபான்மையினர், பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காதவர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள்தான் குறிவைத்து நீக்கப்பட்டனர் எனக் குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பாக, பீகாரின் பெகுசாராய் மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில், கள ஆய்வு நடத்தப்பட்டது. தெக்ரா, மதிஹானி, பெகுசாராய் ஆகிய 3 தொகுதிகளில் உள்ள 19 வாக்குச்சாவடிகளில் நடத்தப்பட்ட அந்த கள ஆய்வில், பல முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

குறிப்பாக, தெக்ரா தொகுதியில் உள்ள வாக்குச்சாவடியில், உண்மையான வாக்காளர்கள் எட்டு பேர் வரைவுப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். ஆனால், ஏற்கெனவே இறந்துவிட்ட 37 பேர், பட்டியலில் இருந்து நீக்கப்படவில்லை. அதேசமயம், உயிரோடு இருப்பவர்கள் இறந்துவிட்டார்கள் என்று நீக்கப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளன. அதுபோல இறந்தவர்களைச் சந்தித்துள்ளார் ராகுல் காந்தி.

“வாழ்க்கையில் பல சுவாரஸ்யமான அனுபவங்கள் கிடைத்திருக்கின்றன, ஆனால், ‘இறந்தவர்களுடன்’ தேநீர் அருந்தும் வாய்ப்பு ஒருபோதும் கிடைத்தது இல்லை. இந்த அரிய அனுபவத்துக்காக, தேர்தல் ஆணையத்துக்கு நன்றி” என்று கிண்டலாக அந்தப் படத்தையும் பகிர்ந்துள்ளார். இவையெல்லாம் தேர்தல் ஆணையத்துக்கு ஆதாரம் இல்லையா?

## ஃப்ளாஷ்பேக்



### ஆம்பூரில் தலைவர்!



சரோஜா வெங்கடேசன்

நான் 40 ஆண்டுகாலமாக கழகப்பணி ஆற்றி வருகிறேன். 2010 – ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆம்பூர் ரயில் நிலையத்தை திறந்து வைக்க வருகை தந்தார். அப்போது மகளிர் அணியில் இருந்த நான் தலைவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். கழக முன்னோடி ஆற்காட்டார், இன்றைய பொதுச் செயலாளர் துரைமுருகன் மற்றும் அன்றைய மாவட்டச் செயலாளர் முகமது சகி ஆகியோர் உடனிருந்தனர்.

**– சரோஜா வெங்கடேசன், மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர், வேலூர் மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வெற்றிவீரர்களுக்குப் பாராட்டு!

1957-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி மாலை, சென்னைக் கடற்கரையில் தி.மு.கழகத்தின் சார்பில், வெற்றி பெற்ற கழகத்தினருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. அண்ணா தனது சிறப்புரையில், “15 பேர்தானே வெற்றிபெற்றார்கள் என்று கேலி பேசுகின்றனர் - ஏளனம் செய்கின்றனர்; திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி அதிகமா குறைவா? என்ற சர்ச்சையில் ஈடுபடுகின்றனர். நாங்கள் பெற்ற வெற்றி குறைவானதுதான் என்றாலும், முக்கியத்துவம் வாய்ந்ததாகும்” என விளக்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131